# EVERWIN MATRIC.HR.SEC.SCHOOL

FA-II- பாடம் -2 Std : III

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

VI. சரி அல்லது தவறு என எழுதுக.

1. எல்லா விலங்குகளும் கடலுக்குச் சென்றன. (தவறு)
2. வேட்டைக்காரர்கள் மரங்களை வேட்டையாடினர். (தவறு)
3. மான் மரங்கள் இல்லாமல் வெப்பமாக உள்ளது என்று கூறியது. (சரி)
4. எல்லாரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். (சரி)

VII. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(பாதுகாப்பாக, விவாதம், பாலைவனம், காயும், மரங்களை)

1. மரங்களுக்கும், விலங்குகளுக்கும் ________நடந்தது.
2. விலங்குகள் எல்லாம் ________நோக்கிச் சென்றன.
3. முயலுக்கு எந்தக் கிழங்கும், ________கிடைக்கவில்லை.
4. மனிதர்கள் ________வெட்டினர்
5. மரங்கள், விலங்குகளுக்கு ________ உள்ளன.

VIII. குறுவினாக்கள்.

1. மரங்கள் எவற்றுடன் சண்டையிட்டன?
   விடை: மரங்கள் விலங்குகளுடன் சண்டையிட்டன.
2. பாலைவனத்தில் விலங்குகளை வேட்டையாடியவர்கள் யார்?
   விடை: பாலைவனத்தில் விலங்குகளை வேட்டையாடியவர்கள் வேட்டைக்காரர்கள்.
3. மனிதர்கள் எதை வெட்டினர்?
   விடை: மனிதர்கள் மரங்களை வெட்டினர்.
4. காட்டை விட்டு எவை வெளியேறின?
   விடை: காட்டை விட்டு விலங்குகள் வெளியேறின.

VIII. சிறுவினா.

1. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - இப்பாடத்தின் கருத்து யாது?
   - உலகில் எவரும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று இல்லை.
   - அனைவரும் சமமானவர்கள்.
   - எல்லாரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே இப்பாடத்தின் கருத்து ஆகும்.

## பாடம் -3 கல்வி கண் போன்றது

VI. சரி அல்லது தவறு என எழுதுக.

1. பொன்வண்ணன் மிதி வண்டி பழுதுபார்க்கும் கடை வைத்திருக்கின்றான். (சரி)
2. அறிவிப்புச்செய்தி ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. (தவறு)
3. பொன்வண்ணனுக்கு உதவித்தொகை கிடைத்தது. (தவறு)
4. வாழ்க்கையை நெறிப்படுத்துவது கல்வி. (சரி)

VII. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(Refer book Pg.No. -15)

VIII. குறுவினாக்கள்.

1. எதன் மூலம் செய்தி அறிவிக்கப்பட்டது?
   விடை: தண்டோரா மூலம் செய்தி அறிவிக்கப்பட்டது.
2. பஞ்சாயத்துத் தலைவர் கிராம சபை கூட்டத்தில் எதனைக் குறித்துப் பேசினார்?
   விடை: பஞ்சாயத்துத் தலைவர் கிராம சபை கூட்டத்தில் உதவித்தொகைக் குறித்துப் பேசினார்.
3. பொன்வண்ணனுக்கு ஏன் உதவித்தொகை கிடைக்கவில்லை?
   விடை: பொன்வண்ணனுக்கு படிக்கத் தெரியாததால் உதவித்தொகை கிடைக்கவில்லை.

IX. சிறுவினா.

1. கல்வி அறிவினால் பெறும் நன்மைகள் யாவை?
   - நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளையும், அறிவியல் மாற்றங்களையும் அறிந்து கொள்ள முடியும்.
   - நம்மை மேம்படுத்திக் கொள்ள முடியும்.
   - கல்வி, தொழிலுக்கு வழிகாட்டுகிறது.

FA-II

கட்டுரை - 2. வண்ணத்துப்பூச்சி

- வண்ணத்துப்பூச்சி பல வண்ணங்களில் இருக்கும்.
- கூட்டுப்புழுவிலிருந்து வண்ணத்துப்பூச்சி உருவாகும்.
- இது பறக்கும் பூச்சி இனத்தைச் சேர்ந்தது.
- இது மலர்களில் இருந்து தேனைப் பருகும்.
- வண்ணத்துப்பூச்சி மெல்லிய உடல் அமைப்பை உடையது.

FA-II- இலக்கணம் Std : III

3. இன எழுத்துகள்

1. இன எழுத்துகள் என்றால் என்ன?
இன எழுத்துகள் பிறக்கும் இடம் ஒலிக்கும் முயற்சி கால அளவு வடிவம் முதலியவற்றை சார்ந்து வருவதே இன எழுத்துகள் ஆகும்.

2. இன எழுத்துக்கு மற்றொரு பெயர் என்ன?
இன எழுத்துக்கு மற்றொரு பெயர் நட்பு எழுத்து

3. உயிர்க்குறில் என்றால் என்ன?
குறுகிய ஓசையுடைய எழுத்துகள் உயிர்க் குறில் எனப்படும்.
அ, இ, உ, எ, ஒ (5)

4. உயிர் நெடில் என்றால் என்ன?
நீண்ட ஓசையுடைய எழுத்துகள் உயிர்நெடில் எனப்படும்.
ஆ, ஈ,ஊ, ஏ, ஐ, ஓ (7)

இலக்கணம் - SA-II

5. ஒற்றெழுத்துகள் என்றால் என்ன?
ஒத்த ஓசையுடைய எழுத்துகள் ஒற்றெழுத்துகள் எனப்படும்.
எ.கா : பக்கம், மச்சம்

6. மெய்யெழுத்துகளுக்கு இன எழுத்துகள் யாவை?
வல்லின எழுத்துகளுக்கு மெல்லின எழுத்துகள் இன எழுத்தாகும்.
க் -ங் = சங்கு, ச் - ஞ் = இஞ்சி, ட்- ண் = வண்டு, த் - ந் = பந்து, ப் - ம் = பம்பரம்.

7. உயிரெழுத்துகளுக்கு நட்பெழுத்துகள் யாவை?
ஆ - ஆ, இ-ஈ, உ-ஊ, எ-ஏ, ஐ-இ, ஒ-ஓ, ஔ-உ

8. இடையின எழுத்துகளுக்கு இன எழுத்துகள் உண்டா? இல்லையா?
இடையின எழுத்துகளுக்கு இன எழுத்துகள் இல்லை. ஆனால் ய்-ர் = யார் ; ற் = ன் ஒன்று. இவற்றிற்கு மட்டும் உண்டு

SA-II

பாடம் -6 - எழில் கொஞ்சும் அழகு

VI. சரி அல்லது தவறு என எழுதுக.

(Refer book Pg.No. -34)

VII. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(Refer book Pg.No. -36)

VIII. குறுவினாக்கள்.

1. ஒகேனக்கல் பகுதியில் நாம் பார்க்க வேண்டிய இடங்களைக் கூறுக.?
விடை: நீர்வீழ்ச்சி, மான்பூங்கா, முதலைப்பண்ணை.
2. ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி, பார்ப்பதற்கு எப்படி இருந்தது?
விடை: வெள்ளியை உருக்கி ஊற்றியது போல இருந்தது.
3. சங்கவை பார்த்த மிகப்பழைமையான கோவிலின் பெயர் என்ன?
விடை: தேசநாதீஸ்வரர் கோவில்.
4. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி எங்கே அமைந்துள்ளது?
விடை: தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது.

IX. சிறுவினா.

1. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி சிறுகுறிப்பு தருக?
விடை:
- ஒகேனக்கல் சுற்றுலா தளமாக அமைந்துள்ளது.
- நீர்வீழ்ச்சி பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.
- நீராடுவதும், படகில் பயணம் செய்வதும் மகிழ்ச்சியை தரும்.

SA-II- கடிதம்

2. அழைப்புக்கடிதம் தேதி : x x x x,
இடம் : சென்னை.

அன்புள்ள தோழிக்கு/தோழனுக்கு,
நலம், நலமறிய ஆவல். அடுத்த மாதம் 30 ஆம் தேதி என் பிறந்தநாள் வருகிறது. இதை சிறுவிழாவாக கொண்டாட என் பெற்றோர் ஆசைப்படுகிறார்கள். இவ்விழாவில் நீயும், உன் பெற்றோரும் கலந்து கொண்டால் நான் மிகவும் மகிழ்வேன். உன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு
உன் அன்புத்தோழன்/தோழி
X X X

உறைமேல் முகவரி

பெறுநர் :

X X X

எண் - 4, காந்தி நகர்.

மதுரை - 89